தாலுக்கா அலுவலகங்களில் ஆவண நகல் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் திட்டம்.

*வினா எண் 929.—திரு. கு. ப. பழனியப்பன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுக்கா அலுவலகங்களில் ஆவண நகல் பெறுவதில் கால தாமதத்தைத் தவிர்க்க தனிப் பிரிவு ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேச முள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தாலுக்கா அலுவலகங் களில் ஆவண நகல்களைப் பெறுவதில் காலதாமதம் ஆவதாக எந்தவித குறிப்புக்களும் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆகவே அதற்கென்று தனிப்பிரிவு ஒன்று அமைக்கும் அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9-10]

திரு. கு. ப. பழனியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா அலுவலகங்களில் இந்த ஆவண நகல்கள் பெறுவது ஒரு எட்டாத கலையாகவே இருந்து வருகிறது. இன்னும் சொல்லப் போனால், வழக்கறிஞர்களாக இருக்கிற என்னைப் போன்றவர்களே நகல் எடுக்க இரண்டு மாதம், 3 மாதம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ரிஜிஸ்டிரால் ஆஃபீஸ், கோர்ட், முனிசிபல் ஆஃபீஸ்களிலே, தனியாக ஒரு பிரிவு இருக்கிற காரணத்தால், மனு கொடுத்து இத்தனை நாளைக்குள் கொடுக்கலாம் என்றெல்லாம் இருக்கிறது. அப்படியெல்லாம், ஒரு பிரிவு இல்லாத காரணத் தால்தான் காலதாமதம் என்று நினைக்கிறேன். அப்படி ஒரு பிரிவை புதிதாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நகல் எடுப்பது எட்டாத ஒரு கலை என்று சொல்வதற்கில்லை. ஆனால் தாலுக்கா அலுவலகங்களில் மனு செய்து இவ்வளவு தினங்களிலே திருப்பித் தரவேண்டும் என்று இன்றைக்கு அரசு வரையறுத்திருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றைக்குத் தாலுக்கா அலுவலகங்களில் பொதுமக்கள் வருகிற போது, இந்தந்த சம்பநதப்பட்ட நகல்களை இவ்வளவு நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் என்று விளம்பரப் பலகைகளிலே போடப்பட்டிருக்கின்றது. எங்கேயாவது போடப்படவில்லை என்று சொன்னால், சட்ட மன்றத்திலே

1981 ஏப்ரல் 29] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சொல்கிறீர்களே, ஆனால் இங்கே இந்த மாதிரி போடவில்லையே என்று சொன்னால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, இந்த மனுக்களைக் கொடுத்து இவ்வளவு காலம் ஆகிவிட்டது என்று என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன் மேல் தக்க நடவடிக்கை எடுத்து, இனிமேல் அதைப் போல நடைபெறாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும்.

திரு. கு. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, தாசில்தார் அவர்கள் தான் இந்த மனுக்களில் உத்தரவிடவேண்டும் என்று இருக்கின்றது. பல சமயங்களில், பல தாலுக்கா அலுவலகங்களில் இந்த தாசில்தார்கள் இருப்பதில்லை. எனவே இதற்கு வேறு ஏதாவது அலுவலர்கள் இருந்தால் இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியும். அப்படி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை. குறிப்பிட்ட இடங்களிலே சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அதற்குரிய காரணங்களை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

வறட்சிப் பகுதிகளில் குத்தகைத் தொகையை ரத்து செய்தல்.

*வினா எண் 930—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் (குத்தகை) விவசாயிகளுக்கு இந்த பசலி குத்தகை முழுவதையும் ரத்து செய்ய அரசு உத்திரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டு குத்தகை விவசாயிகள் தங்களுடைய கைப் பொருள்களை எல்லாம் போட்டு, விவசாயம் செய்து அது முழுவதும் சாவியாகப் போயிருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் குத்தகை வேறு கட்ட முடியுமா ? வறட்சி என்று இன்றைக்கு அறிவித்து இருக்கிறீர்கள், அப்படி வறட்சி என்று அறிவித்து அந்தப் பகுதிகளிலே உடனடியாக காலதாமதம் இல்லாமல் குத்தகைப் பகுதியை ரத்து செய்ய வேண்டும் என்பதை அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 75 : 25 என்பது அந்த விளைச்சல்தான் கொடுக்க